தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 பிப்ரவரி 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

1. இரங்கல் தீர்மானம்

ஜம்மு–காஷ்மீர் மாநிலம், சியாச்சின் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானம். ஜம்மு–காஷ்மீர் மாநிலம், சியாச்சின் பகுதியில் இந்திய நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்களான ஹவில்தார் திரு. எம். ஏழுமலை, ஹவில்தார் திரு. எஸ். குமார், சிப்பாய் திரு. ஜி. கணேசன் மற்றும் சிப்பாய் திரு. என். ராமமூர்த்தி ஆகியோர் உட்பட 10 இந்திய இராணுவ வீரர்கள் 3–2–2016 அன்று ஏற்பட்ட பனிச் சரிவில் சிக்கி உயிரிழந்தனர் என்ற துயரச் செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இந்தச் துயரச் சம்பவத்தால் தங்களது இன்னுயிரை இழந்திட்ட*

இராணுவ வீரர்களின் குடும்பத்தினர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த நான்கு இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இத்துயரச் சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

61—

புதை மின்வடம்

***35630—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சியிலுள்ள மின் கம்பிகளை புதை மின்வடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?